**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.279/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மங்கையற்கரசி | Prosecution | LW-2 as PW-2. |
| Father Name | க/பெ. ராஜேந்திரன் | Defence | |
| Village | திருநன்றியூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 47/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**07.10.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது தெருவினை சேர்ந்தவர். கடந்த வருடம் ஒரு நாள் தேதி மாதம் நினைவில் இல்லை எனது கணவர் வேன் நிறுத்தவது தொடர்பான பிரச்சனைக்காக காவல் நிலையம் சென்று வந்தார். மறு நாள் காலை ஆஜர் எதிரி எங்கள் வீட்டு வாசலுக்கு வந்து எனது கணவரிடம் நீ எதற்காக என் மீது புகார் கொடுக்க காவல்நிலையம் சென்றாய் என்று கேட்டு தகறாறு செய்தார். அப்போது ஆஜர் எதிரி எனது கணவரை கீழே தள்ளினார். என் கணவருக்கு முதுகில் கீழே கிடந்த கல் குத்தி லேசான இரத்த காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆஜர் எதிரிக்கும் எங்களுக்கும் முன்விரோதம் எதும் உண்டா என்றால் இல்லை. ஆஜர் எதிரிக்கு 5 மகள் கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி அவர் வீட்டு வாசலில் காம்பவுன்டு சுவர் எழுப்பினார் என்றால் சரிதான். நவீன் குமார் என்பவர் வேன் வைத்துள்ளார் என்றால் சரிதான். நவீன் குமாருக்கும் ஆஜர் எதிரிக்கும் அடிக்கடி பிரச்சனை நடந்து வந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரி என்னை அடிக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவரை மட்டும் தள்ளிவிட்டார் என்றால் சரிதான். எந்த கட்டையாலும் என் கணவரை ஆஜர்

எதிரி அடிக்கவில்லை என்றாலும் சரிதான். நவீன்குமாருக்கும் ஆஜர் எதிரிக்கும் தான் பிரச்சனை நடந்து வந்தது என்றால் சரிதான். நவீன் குமார் மீது வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டு நிலுவையில் இருந்த போது என் கணவரும் நவீன்குமாரும் ஆஜர் எதிரியிடம் பிரச்சனை செய்ததால் மயிலாடுதுறை GHயில் சிகிச்சை பெற்றார் என்றால் சரிதான். ஆஜர் எதிரிமீது வழக்கு பதிய வேண்டும் என்பதற்காக போலியாக புகார் கொடுத்து வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையத்தில் என்னையும் எனது கணவரையும் தாக்கிவிட்டதாக பொய்யான புகார் அளிக்கப்பட்டு புகாரின் அடிப்படையில் எதிரி மீது பொய்யான வழக்கு தொடரப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் இது போன்ற சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எனது கணவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.279/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | ராஜேந்திரன் | Prosecution | LW-1 as PW-1. |
| Father Name | காசி | Defence | |
| Village | திருநன்றியூர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 53/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**07.10.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரில் வசிக்கும் நவீன் குமார் என்பவருக்கும் எதிரிக்கும் ஏற்கனவே தகறாறு ஏற்பட்டது. எதிரி சிவக்குமார் ஊர் பொது இடத்தை ஆக்கிரமித்ததாகவும், தன்னுடைய வேனை ஊருக்குள் சென்று திருப்ப முடியாத காரணத்தாலும், நவீன் குமார் பஞ்சாயத்தாரிடம் புகார் கொடுத்திருந்தார். அதனை தொடர்ந்து நானும் பஞ்சாயத்தாருடன் கடந்த 22.7.2024 ம் தேதி சுமார் மாலை 6.00 மணியளவில் வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். விசாரணைக்கு எதிரி சிவக்குமார் வரவில்லை. மறுநாள் காலை 7.00 மணியளவில் நான் எனது வீட்டில் துாங்கி கொண்டிருந்த போது ஆஜர் எதிரி எனது வீட்டு வாசலுக்கு வந்து "எதற்காக நீ காவல்நிலையம் சென்று என் மீது புகார் கொடுக்கிறாய்" என்று கேட்டார்.

எங்கள் இருவருக்குள்ளும் வாக்குவாதம் ஏற்பட்டு ஆஜர் எதிரி என்னை கீழே தள்ளிவிட்டார். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் சண்டையை விலக்கி விட்டனர். அதன் பின் நானும் எனது மனைவியும் மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்ட பின் வைத்தீஸ்வரன் கோயில் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். நீதிமன்றத்தில்

தற்போது என்னிடத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அந்த புகார் மனு அசாஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் முன்விரோம் இருந்ததா என்றால் இல்லை. ஆஜர் எதிரிக்கு 5 மகள்கள் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு 3வது வீட்டில் நவீன் என்பவர் வசிக்கிறார் என்றால் சரிதான். அவர் வேன் வைத்திருக்கிறார் என்றாலும் சரிதான். எதிரியின் வீட்டு வாசலில் காம்பவுன்ட் சுவர் எழுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த காம்பவுன்ட் சுவர் பக்கம் வேன் திரும்பும் போது இடிக்கும் என்பதற்காக ஆஜர் எதரிரியிடம் நவீன் என்பவர் அடிக்கடி தகறாறு செய்தார் என்றால் அதுபற்றி எ னக்கு தெரியாது. நவீன் மீது ஆஜர் எதிரி வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையத்தில் பல முறை புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

ஆஜர் எதிரி வைத்த காம்பவுன்ட் சுவரினை VAO வந்து பார்த்தார்கள் என்றாலும் அவர்களிடதில் தான் சுவர் உள்ளது என்று அவர் இடத்தில் தான் உள்ளது உன் வேலையை பார்த்துக்கொள் என்று VAO கூறினார் என்றாலும் சரிதான். அதனை கேட்காமல் ஆஜர் எதிரியிடம் நவீன் என்பவர் வீன் பிரச்சனை செய்து வந்தார் என்பதால் வைத்தீஸ்வரன் கோயில் காவல் நிலையத்தில் புகார் அளித்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றாலும் சரிதான்.

நான் நவீன் என்பவருக்கு வேண்டியவர் என்பதால் ஆஜர் எதிரியை வரும்போதும் போகும் போதும் திட்டினேன் என்றால் சரியல்ல. அது தொடர்பாக கடந்த 23.07.2024 ந்தேதி அன்று மாலை ஆஜர் எதிரியிடம் பிரச்சனை செய்தேன் என்றால் காலையில் நடைபெற்றது. 23.07.2024 ம் தேதி அன்று ஆஜர் எதிரி மயிலாடுதுறை யில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரிதான். அவ்வாறு சிகிச்சை பெற்று வரும் போது அவர் மீது எதிர் வழக்கு தொடர வேண்டும் என்பதற்காக அவர் மீது என்னையும் எனது மனைவியை யும் தாக்கிவிட்டதாக பொய்யான புகார் கொடுத்து அவர் மீது வழக்கு தொடர்ந்துள்ளோம் என்றால்

சரியல்ல. எதிரி என்னை எந்த ஆயுதத்தால் தாக்கினார் என்றால் முதலில் கையால் தள்ளினார் கீழே விழுந்துவிட்டேன். பின்னர் எந்த குச்சியால் என்னை தாக்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் எந்த மருத்துவ மனையில் மருத்துவம் செய்தேன் என்றால் அது தெரியவில்லை. ஆஜர் எதிரி என்னை தாக்கவில்லை என்றாலும் ஆஜர் எதிரிக்கும் இந்த வழகு்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் நவீன் என்பவருக்கு ஆதரவாக நாங்கள் பொய் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நவீன் என்பவரின் தகப்பனார் கோவிந்தராஜ் என்பவரை இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**